# தத்துவங்கள் 96

**தத்துவங்கள் 96**

**ஓம் குரு போகர் சரணாய நமஸ்து**

**ஓம் குரு போகர் பாத கமலா சரணாய நமஸ்து**

**ஓம் சர்வம் குரு போகர் சரணம்**

**---------------------------------------------------**

**ஓம் போக பெருமானே போற்றி**

**ஓம் போக மகரிஷியே போற்றி**

**ஓம் போக முதல் சித்தரே போற்றி**

**ஓம் போக ஞான குருவே போற்றி**

**--------------------------------------------------**

**தத்துவங்கள் 96 கீழே அதன் விளக்கங்களுடன் கொடுக்கப்பட்டுள்ளது , இது ஒவ்வொருவரும் யோகா சாதனையின் மூலம் உணரக்கூடியதே , முழுவதும் உணர்ந்தால் தான் நன்கு புரியவும் வரும் , யோக சாதனையாளர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு விஷயம் .**

**ஞானேந்திறியம் - 5**

**பொறி - 5**

**புலன்கள் - 5**

**கர்மேந்திரியம் - 5**

**அந்தக்கரணம் - 4**

**ஆக**

**தத்துவங்கள் - 24**

**வித்யா தத்துவம் - 7**

**சிவ தத்துவம் - 5**

**பிற கருவிகள் - 60**

**மொத்தமாக 96 தத்துவங்கள்**

**-------------------------------------------------------------------------------

சற்று விரிவாக :

பூதங்கள் 5

ஞானேந்திறியம் 5

ஞ்யநேந்திரிய கிரியைகள் 5

கன்மேந்திரியம் 5

கன்மேந்திரிய கிரியைகள் 5

அறிவு1
கரணம் 4

நாடி 10

வாய்வு 10

ஆசயம் 5

கோசம் 5

ஆதாரம் 6

மண்டலம் 3

மலம் 3

தோஷம் 3

ஈஷனை 3

குணம் 3

விராகம் 8

வினை 2

அவஸ்தை 5

மொத்தமாக 96

தனி தனியாக தத்துவ விளக்கம் :

பூதங்கள் 5 விளக்கம் :

1 . ஆகாயம் : பரவெளி - நிறம் - ஸ்படிகம் , இதன் கூறுகள் : காமம் , குரோதம் லோபம் , மோஹம் , மதம் ; மொத்தமாக 5

2 . வாய்வு : காற்று - நிறம் - புகை , பச்சை , ஸ்படிகம் . இதன் கூறுகள் : இருத்தல்,நடத்தல் ,ஓடல் ,கிடத்தல் ,நிற்றல் மொத்தமாக 5

3 . தேயு : நெருப்பு / அக்னி - நிறம் - சிகப்பு , இதன் கூறுகள் : பயம் , அகங்காரம் , சோம்பல் , நித்திரை , மைதுனம் ; மொத்தமாக 5

4 . அப்பு : ஜலம் - நிறம் - ஸ்படிக வெள்ளை . இதன் கூறுகள் : உதிரம் , மச்சை , சிறு நீர் , மூளை , சுக்கிலம் ; மொத்தமாக 5

5 . பிருதிவி : மண் - நிறம் - பொன்மை . இதன் கூறுகள் : மயிர் , தோல் நரம்பு , எலும்பு , இறைச்சி மொத்தமாக 5

ஞ்யநேந்திரியம் 5 விளக்கம் :

1 . சுரோத்திரம் - காது சப்தங்களை கேட்கும்

2 . த்வக்கு - மேல் தோல் - ஸ்பரிச உணர்வு

3 . சட்சூ - கண் - ரூபங்களை பார்க்கும்

4 . சிங்குவை - நாக்கு - அறுசுவைகளை அறியும்

5 . ஆகிரணம் - நாசி - வாசனைகளை அறியும்

ஞ்யநேந்திரிய கிரியைகள் 5 விளக்கம் :

1 . சப்தம் - செவியில் நின்று கேட்பது

2 . ஸ்பரிசம் - தேகத்தில் , சர்மத்திலிருந்து சுகமென்பதை தெரிவிக்கும்

3 . ரூபம் - கண்ணில் நின்று பல காட்சிகளை காண்பிக்கும்

4 . ரசம் - நாவில் நின்று அறுசுவையின் பேதங்களை அறிவிக்கும்

5 . கந்தம் - நாசியில் இருந்து வாசனை பேதங்களை உணர்த்தும்

கன்மேந்திரியம் 5 விளக்கம் :

1 . வாக்கு - வாய் - பேசுவது

2 . பாணி - கை - ஆட்டி அசைத்து வேலை செய்தல்

3 . பாதம் - கால் - நடத்தல்

4 . உபஸ்த்தம் - நீர் வரும் குறி - காம சுகம் அனுபவித்தல்

5 . குதம் - பாயுரு - ஆசனவாய்

கன்மேந்திரிய கிரியைகள் 5 விளக்கம் :

1 . வசனம் - வாயில் இருந்து பேசுவிப்பது

2 . தானம் - கையில் இருந்து கொடுப்பது

3 . கமனம் - காலில் நின்று நடத்துவிக்கும்

4 . ஆனந்தம் - லிங்கம் , யோனியில் நின்று கர்மானந்தம் விளைவிக்கும்

5 . விசர்ஜனம் - அபானத்தில் நின்று மலத்தை வெளியேற்றும்

அறிவு 1 விளக்கம் :

1 . அறிவு அல்லது உள்ளம் . இது ஆகாயத்தின் அம்சம் , ஆகையால் உச்சியில் இருந்து சகலத்தையும் செயல்விக்கும்.

நாடிகள் 10 விளக்கம் :

1 . இடகலை - வலது கால் பெரு விரலில் இருந்து அசைந்து இயங்கி ஏறி இடது நாசியை பற்றி நிற்கும்

2 . பிங்கலை - இடது கால் பெரு விரலில் இருந்து அசைந்து இயங்கி ஏறி வலது நாசியை பற்றி நிற்கும்

3 . சுழுமுனை - குதத்தை பற்றி நின்று ஏறி பிராண வாயுவை சேர்ந்து சிரசளவு முட்டி நிற்கும்

4 . சிங்குவை - உண்ணாக்கில் நின்று அன்ன சாரம் ஊரவும் பானத்தை விழுங்கவும் செய்யும்

5 . புருடன் - வலக்கண்ணில் இருந்து கருமணியை ஆட்டி வைக்கும்

6 . காந்தாரி - இடக்கண்ணில் இருந்து கருமணியை ஆட்டி வைக்கும்

7 . அத்தி - வலக்காதில் இருந்து சத்தங்களை கேட்க வைக்கும்

8 . குரு - இடக்காதில் இருந்து சத்தங்களை கேட்க வைக்கும்

9 . அலம்புடை - கண்டத்தில் இருந்து நாசியில் கசிந்து நீரை ஏற்ற இறக்க உபாயங்கள் செய்யும்

10 . சங்கினி - உபஸ்தத்தில் இருந்து ஆனந்தத்தில் மிஞ்ச வொட்டாமல் காக்கும்

வாயு 10 விளக்கம் :

1 . பிராணன் - மூலாதாரத்தை சேர்ந்து மேல் நோக்கி இதயத்தில் நின்று நாசியில் சென்று திரும்பி அலையும்படி செய்யும்

2 . அபானன் - குதத்தை பற்றி நின்று ஜாடராக்கினியாய் உஷ்ணத்தை உண்டாக்கி , உண்ட அன்ன பானாதிகளை ஜீரணிக்க செய்யும்

3 . வியானன் - சர்வாங்கமும் வியாபித்து இருந்து பொருத்திடங்கள் எல்லாம் களைப்பும் தவனமும் உண்டாகசெய்யும்

4 . சமானன் - சரீரத்தின் நடுவான நாபிஸ்த்தானத்தில் நின்று ஜீரணித்த அன்ன பானாதிகளை உதிரமாக்கி ரத்த நாடிகளின் வழியாக இழுத்து சென்று சமமாக பரவி தேகத்தை வளர்க்கும்

5 . உதானன் - கண்டஸ்தானத்தில் நின்று சத்ததோடே கலந்து குரலோசை செய்ய , பேசக்கூடிய காரியத்தை செய்யும்

6 . நாகன் - வாயில் இருந்து வாந்தி செய்விக்கும்

7 . கூர்மன் - கண் ரப்பையில் இருந்து விளிக்கசெயும்

8 . கிரிதரன் - மூக்கில் நின்று குறுகுறுத்து தும்மல் உண்டாக்கும்

9 . தேவதத்தன் - மார்பில் நின்று கபத்தை சேர்த்து நெட்டி , கொட்டாவி , விக்கல் உண்டாக்கும்

10 . தனஞ்செயன் - பிராணன் நீங்கின பிறகும் 3 நாட்கள் மட்டும் இருந்து சரீரம் வீங்கி வெடித்து போவான் , அக்னியில் சுடும்போது அப்போதே போய்விடும்

ஆசயம் 5 விளக்கம் :

1 . ஆமாசயம் - அன்னம் , தண்ணீர் பருகுமிடம்

2 . ஜலாசயம் - அன்னம் , தண்ணீர் இறங்குமிடம்

3 . மலாசயம் - மலம் சேருமிடம்

4 . ஜலஞ்சயாசம் - மூத்திரம் சேருமிடம்

5 . சுக்கிலாசயம் - விந்து நிறைந்து இருக்குமிடம்

கோசங்கள் 5 விளக்கம் :

1 . அன்னமய கோசம் - ஸ்தூல சரீரத்தை அழிக்காமல் நிலைக்கசெயும் .

2 . பிராணமய கோசம் - பிராண வாயும் கர்மேந்திரியங்களும் சேர்ந்து சொப்பனத்தில் சூட்சும சரீரத்துடன் சேர்ந்து விவகாரம் செய்யும்

3 . மனோமய கோசம் - மலமும் கண்மேந்திரியமும் சொப்பனத்தில் சூட்சும சரீரத்தில் சேர்ந்து செயல் படும்

4 . விஞ்ஞானமய கோசம் - புத்தியும் பொறிகளும் சேர்ந்து சொப்பனத்தில் சூட்சும சரீரத்தில் செயல் படும்

5 . ஆனந்த மய கோசம் - காரண சரீரத்துக்கு ஆதாரமாக இருந்து மேற்கூறிய பிராண , மனோமய , விஞ்ஞானமய கோசத்துடன் சூட்சும சரீரம் நிலைத்து நிற்கும்

ஆதாரங்கள் 6 சிறு விளக்கம் :

1 . மூலாதாரம் - குதத்துக்கும் , குய்யத்துக்கும் மத்தியில் உள்ள திரிகோண ஸ்தானம் , தேவி வல்லபை இதற்க்கு அதிர்ஷ்டான மூர்த்தி - விநாயகர் .

2 . சுவாதிஷ்டானம் - முதுகுத்தண்டின் அடிப்பகுதி சமீபம் , ஆண்குறி அல்லது பெண்குறி அடிபகுதியில் உள்ள நாற்கோண ஸ்தானம் , இதற்க்கு அதிஷ்டான மூர்த்தி பிரம்ம தேவர் , தேவி சரஸ்வதி

3 . மணிபூரகம் - நாபிச்தானத்திற்கு மேலுள்ள பிறை போல் வளைந்த ஸ்தானம் ,இதற்க்கு அதிஷ்டான மூர்த்தி மகா விஷ்ணு , தேவி மகாலட்சுமி

4 . அனாஹதம் - ஹிருதய ஸ்தானத்தில் உள்ள முக்கோண ஸ்தானம் , இதற்க்கு அதிஷ்டான மூர்த்தி மகேஸ்வரன் , தேவி மகேஸ்வரி

5 . விசுத்தி - கண்டத்தில் உள்ளது , அருகோனஸ்தானம் , இதற்க்கு அதிஷ்டான மூர்த்தி மகேஸ்வரன் , தேவி மகேஸ்வரி

ஆக்ஞா - முகத்தில் உள்ள புருவ மத்தி - திரிகோண உச்சஸ்தானம், இதற்க்கு அதிஷ்டான மூர்த்தி சதாசிவன் , தேவி மனோன்மணி

அக்னி மண்டலம் 3 விளக்கம் :

1 . அக்னி மண்டலம் - மூலாதாரத்தில் இருந்து இளகி நாபி வரையில் முயற்சி செய்யும்

2 . ஆதித்த மண்டலம் - நாபியில் இருந்து கண்டம் வரை ஸ்திரம் செய்யும்

3 . சந்திர மண்டலம் - கண்ட ஸ்தானத்தில் இருந்து புருவ மத்தி வரை ஸ்திரமாகும்

மலங்கள் 3 விளக்கம் :

1 . ஆணவ மலம் - ஸ்தூல சரீரத்தை நான்தான் என்று நினைத்து இருக்கும்

2 . காமிய மலம் - கண்ணால் கண்டவைகளை எல்லாம் இச்சிக்கும்

3 . மாயா மலம் - தனக்கு நேரும் நிலையை தானறியாமலே செய்தல் , கோபம் கொள்ளல்

முப்பிணிகள் :

1 . வாதம் - வாயுவின் கோபம்

2 . பித்தம் - அக்னியின் கோபம்

3 . சிலேத்துமம் - அப்புவின் கோபம்

ஈஷணை 3 விளக்கம் :

1 . தாரேஷனை - பெண்ணாசை ( ஆணாசை ) அதிகம் கொள்ளல்

2 . புத்திரேஷனை - புத்திர , புத்திரி மீது அதிக ஆசை

3 . அர்தேஷனை - பொருள்கள் மீது அதிக ஆசை வைத்தல்

குணங்கள் 3 விளக்கம் :

1 . சாத்வீகம் - நிறம் வெண்மை , சகலரும் மதிப்பர் , அமிர்த குணம் , இதில் லயித்து இருப்பவர் தத்துவ ஞான நிஷ்டை அடைவர்

2 . ராஜஸ குணம் - நிறம் சிவப்பு , இக்குணம் படைத்தவர் அகங்காரம் ஆணவம் உடன் இருப்பார்

3 . தாமச குணம் - நிறம் கருப்பு , இவர்கள் அதிக உணவு சோம்பல் , நித்திரை , மிகுந்த கோபம் எதிலும் நிலை இன்மை உடையவர் .

விரகங்கள் 8 விளக்கம் :

1 . காமம் - அதிக ஆசை கொள்ளல்

2 . குரோதம் - பகை கொள்ளல் , அன்பில்லாமை

3 . லோபம் - பிறர்க்கு ஈயாதவர் , கருமி

4 . மோகம் - பலவற்றிலும் ஆசைப்படுதல்

5 . மதம் - பிறரை மதியாதிருத்தல்

6 . மாச்சரியம் - மனதில் சதா விரோத எண்ணங்கள்

7 . இடும்பை - எல்லோரையும் உதாசீனபடுத்துதல்

8 . அஸ்சூயை - பொறாமைக்குணம்

அவஸ்த்தைகள் 5 ஸ்தானங்கள் :

1 . சாக்கிரம் - லலாடஸ்தானம் - ஆக்ன்யா சக்கரம்

2 . சொப்பனம் - கண்டஸ்தானம் - விசுத்தி சக்கரம்

3 . சுழுப்தி - ஹிருதயஸ்தானம் - அனாஹதம் சக்கரம்

4 . துரியம் - நாபிஸ்தானம் - மணிபூரகம் சக்கரம்

5 . துரியாதீதம் - குய்யஸ்தானம் - ஸ்வாதிஷ்டானம் , மூலாதாரம் சக்கரம்

மொத்தமாக 96 தத்துவங்கள் , இவை அனைத்தையும் அவர் அவர் அனுபவத்தில் உணர்ந்து அறிந்து தாண்டிய பிறகு , முக்தி என்னும் நிலைக்கு அடி எடுத்து வைக்கிறோம்.